மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை நான் புரிந்துகொள்கிறேன், மதிக்கிறேன். (குறுக்கீடுகள்) இது விவாதிக்கப்பட வேண்டியதுதான். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்களும் இப்பொழுதுதான் மருத்துவமனைக்குச் சென்று அடிபட்டவர்களைப் பார்த்துவிட்டு வந்தார்கள். நானும் இப்பொழுதுதான் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். ஆகவே, கேள்வி நேரம் முடிந்தவுடனே எடுத்துக்கொள்வதில் எந்த ஆட்சேபனையும் இல்லை. நான் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரம் முடிந்த பிறகுதான் எடுக்கவேண்டும் என்பது rule. அதற்கப்புறம்தான் எடுக்க முடியும்.

1. வினாக்கள்-விடைகள்—தொடர்ச்சி

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

21—

சாலை வசதி

***734—திருமதி மு. சந்திரா:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராஜபாளையம் தொகுதி, வடகரை கிராமம் முதல் கலிங்கப்பட்டி வரை பழுதடைந்துள்ள சாலையைச் செப்பனிட்டுப் புதிதாக அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் ஊராட்சி ஒன்றிய சாலையான வடகரை முதல் கலிங்கப்பட்டி வரையிலான சாலையில் பாரத் நிர்மாண் திட்டத்தின்கீழ் மேம்பாட்டுப் பணிகள் துவக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா.

திருமதி மு. சந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

(மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார் இருக்கையைவிட்டு எழுந்து முன் இருக்கைக்கு வந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா-விடை நேரம் நடந்துகொண்டிருக்கிறது. முன்வரிசை இருக்கைக்கு அருகில் வந்து நிற்காதீர்கள். உங்கள் இருக்கைக்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர்தான் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் கோஷமிட்டுக்கொண்டே அவையை விட்டு வெளியேறினர்.)

முற்பகல் 9-35

இந்தக் கேள்வியைக் கேட்ட மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

அடுத்து, வினா எண் 22, திரு. ஞா. ஜாண் ஜோசப், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

22—

கூட்டுறவு வங்கி

***17885—திரு. ஞா. ஜாண் ஜோசப்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளவங்கோடு தொகுதி, மெதுகும்மல் கூட்டுறவு வங்கியை மீண்டும் செயல்பட வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விளவங்கோடு தொகுதி, மெதுகும்மல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மீண்டும் செயல்பட, கடந்த 3-10-2008 அன்று